I

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 8.6.2011

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 1.6.2011 அன்று ராமேஸ்வரம் தங்கு தளத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 707 மீன் பிடி விசைப் படகுகளில், ராமேஸ்வரம் பகுதியினை சேர்ந்த TN 10/MFB/581 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 5 மீனவர்கள் மற்றும் TN 12/MFB/252 என்ற விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களைத் தவிர இதர படகுகள் மற்றும் மீனவர்கள் கரை திரும்பி விட்டனர். இந்த இரண்டு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்களும், மண்டபம் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இன்னொரு மீன் பிடி விசைப் படகான TN 09/MFB/153 என்ற விசைப் படகும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்களும் கரை திரும்பவில்லை.

ராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த 2 மீன் பிடி விசைப் படகுகள் மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்கள் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த ஒரு மீன் பிடி விசைப் படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள், ஆக மொத்தம் 13 மீனவர்களையும், 3 விசைப் படகுகளையும் கடலோர காவல் படை மற்றும் இந்திய கப்பற் படை மூலம் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தேடி கண்டுபிடிக்க 2.6.2011 அன்று எனது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடலோரக் காவல் படையினரால் தேடுதல் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருந்த தருணத்தில், காணாமல் போன மூன்று விசைப் படகுகளில் ராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 10/MFB/581 என்ற விசைப் படகும் அதில் மீன் பிடிப்பு மேற்கொள்ளச் சென்ற 5 மீனவர்களும் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த TN 09/MFB/153 என்ற மீன் பிடி விசைப் படகும் அதிலிருந்த 4 மீனவர்களும், ஆக மொத்தம் 9 மீனவர்களும் மீட்புப் படகுகள் உதவியுடன் 3.6.2011 அன்று காலை பத்திரமாக கரை திரும்பி விட்டனர்.

ராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 12/MFB/252 என்ற பதிவு எண் கொண்ட ஒரு படகு மட்டும் மோசமான பருவ நிலை காரணமாக காற்றின் வேகத்தால் இலங்கையிலுள்ள நெடுந்தீவு அருகிலுள்ள பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அங்கு அப்படகு மூழ்கியதாகவும், அப்படகில் சென்ற ராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. மூக்குத் துரையின் மகன் திரு. ஜெயக்குமார், வயது 45, திரு. தேவக்குமார் மகன் திரு. பிரபாத், வயது 28, திரு. திவ்யநாதன் மகன் திரு. சுந்தர், வயது 50, திரு. கருப்பையா மகன் திரு. மாரிமுத்து, வயது 45, ஆகிய நான்கு மீனவர்களும் 8 மணி நேரம் நடுக்கடலில் தத்தளித்து நீந்தி, இலங்கையிலுள்ள நைனாத் தீவில் பத்திரமாக கரை சேர்ந்ததாகவும் தகவல் பெறப்பட்டது.

இந்த நான்கு மீனவர்களும் இலங்கை ஊர்க் காவல் படையினரால் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திற்குத் தெரிவித்து, இச்செய்தியை உறுதி செய்திடுமாறும், மேற்குறித்த மீனவர்களுக்கு உரிய அனைத்து உதவிகளையும் செய்திடுமாறும், அவர்களை விரைவில் விடுவித்து தமிழகத்திற்கு அனுப்பி வைத்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசால் 3.6.2011 அன்று நிகரிச் செய்தி அனுப்பப்பட்டது. மேலும், தொலைபேசி மூலமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த 4 மீனவர்களும் காங்கேசன் துறை நீதிமன்றத்தால் 17.6.2011 வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக 6.6.2011 அன்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திடமிருந்து தொலைபேசி மற்றும் நிகரி மூலம் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இது பற்றி கடிதம் அனுப்பியுள்ளேன். நான்கு அப்பாவி மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வற்புறுத்துமாறு அதில் நான் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மீனவர்களின் நலனை பேணிக் காக்கவும், அவர்களின் வாழ்வு மேம்படவும் எனது தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

******